# அரசு தானாக பதவி விலகும் வரை போராட்டம்

## தொடரும் அனுரா எச்சரிக்கை

(காலி)

தற்போதைய அரசு தானாகப் பதவியிலிருந்து விலகும் வரை, எமது போராட்டம் எந்தவித இடையூறுமின்றித் தொடர்ந்து நடைபெறும் என்று பதில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 11 இதழ் 43
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 24 — 03 — 1992

## பல நாட்டு போர் வீரர்கள் இலங்கை வருகை

(கொழும்பு)

பல நாடுகளிலிருந்து போர் வீரர்கள் தற்பொழுது கொழும்பு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டாம் உலகப்போரில் ஜப்பானின் தாக்குதலிலிருந்து

[4-ம் பக்கம் பார்க்க]

## இரு நாள் தாக்குதலில் 10 பேர் படுகாயம்!

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவு மணலாறு மாவட்டத்தில் கடந்த இரு நாட்களாக நடத்தப்பட்ட விமான மற்றும் ஷெல் தாக்கு

(4ம் பக்கம் பார்க்க)

### வடக்கு - கிழக்கு பகுதியில்

# இராணுவத்தினர் ஏழுமுனையில் பாரிய தாக்குதலை ஆரம்பிப்பு

(கொழும்பு)

**மணலாறு மாவட்டத்தில், விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுப் படைகளுக்கும் இடையில் கடுமையான சமர் தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது. இதே வேளையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் ஏழு முனைகளில் சிறிலங்காப் படையினர் பாரிய தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.**

வடக்கு-கிழக்கு பகுதியில் தற்போது படையினர் ஏழு முனைகளில் பாரிய தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

மணலாறு, வவுனியா, யாழ்ப்பாணம், திருகோணமலை, தொப்பிகல, அம்பாறை, பொலநறுவை ஆகியஏழுமுனைகளிலுமே இத்தாக்குதல் இடம்பெற்று வருவதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

இந்த ஏழுமுனைத்தாக்குதலிலும் ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும், விமானப் படை, கடற்படையும் ஈடுபட்டுள்ளன. (சி)

## மணலாறு மாவட்டத்தில் கடும் சண்டை மூண்டது

(மணலாறு)

மணலாறு பகுதியில் நேற்று நண்பகல் மிகக் கடும் யுத்தம் மூண்டதாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானப் படையின் உதவியுடன் முன்னேற முயன்ற படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மிகக் கடும் மோதல் ஏற்பட்டதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மோதலில் இருதரப்பிற்கும் பெரும் சேதம் ஏற்பட்டிருக்கலாமெனவும் அரசுதரப்புச் செய்திகள் கூறின. (சி)

## குமணவில் ஒய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பலில் பங்குனி மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

## புலிகள் தெரிவுக் குழுவுக்கு 3 நிபந்தனைகள் முன்வைப்பு

[லண்டன்]

விடுதலைப்புலிகள் மூன்று நிபந்தனைகளை விதித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு கடிதம் எழுதியுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு நேரடியாக யாழ்ப்பாணம் வந்து பொதுமக்கள் படும் துன்ப துயரங்களைப் பார்வையிடவேண்டும்.

இக் குழுபுலிகளைஉத்தியோக பூர்வமாகச் சந்தித்து பேச்சு நடத்த வேண்டும்.

உரியபாதுகாப்பு வழங்கப் பட்டால் கொழும்பிற்கு புலி

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் தாக்குதல்கள்

(யாழ்ப்பாணம்)

பூநகரி கல்முனைக் கடலில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று அதிகாலையில் 50 கலிபர் தாக்குதலை நடத்தினார்கள்.

இதேவேளை கட்டுவன், வீமன்காமம், வளலாய், தச்சன்காடு இராணுவ முகாம்

(4ம் பக்கம் பார்க்க)

## மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன,

இம்மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாதபோதும் இங்கு குறிப்பிட்ட பகுதியில் மட்டுப் படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாம்.

இதேவேளை, திருமலையில் மூதூர்ப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டு, படை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாம் (சி)

## மணலாறு யுத்தம் புலிகளுக்கு ஆயுதங்களை பெற்றுக் கொடுக்கிறது

(யாழ்ப்பாணம்)

மணலாறு யுத்தம் புலிகளுக்கு ஆயுதங்களைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு போராக இடம் பெற்று வருவதாக இராணுவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசு எதிர்பார்த்தபடி இராணுவத்தினரால் இப் போரில்முன்னேறமுடியவில்லை அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட சீன ஆயுதங்கள் உட்பட பல ராணுவ தளபாடங்களை படையினர் புலிகளிடம் பறிகொடுத்துள்ளனர்.

இத்தாக்குதல் நடவடிக்கையினால் அரச படைகள் மேலும் பின்தள்ளப்பட்டதுடன் பாரிய செலவீனங்களும் ஏற்பட்டுள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாவட்டத்தில் போரிடுவதற்கென அனுப்பிவைக்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வழங்கக் கோரி இந்திய மீனவர் போர்க்கொடி

(சென்னை)

சிறீலங்கா கடற்படையினரிடமிருந்து தமக்கு பாதுகாப்பு வழங்கவேண்டுமெனக் கோரி இந்திய மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பு நடத்திவருகின்றனர்.

அண்மையில் நாகபட்டினத்திலுள்ள காயிதே மில்லத் மாவட்டத்தைச் சேர்ந்த 7 மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும்போது சிறிலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தமீனவர்கள் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்தும், தமது தொழிலுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு இந்திய அரசிடம் கோரியும், 320 மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களான 1500 மீனவர்கள், கடந்த 21ம் திகதி தொடக்கம் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாதிருக்கின்றனர். (கே-ரி

## மீனவரை துன்புறுத்தாதீர் இந்தியா கோரிக்கை

(சென்னை)

''இந்திய மீனவர்களை ஒரு போதும் துன்புறுத்தவேண்டாமெனவும் சர்வதேச கடல் எல்லையைத்தாண்டி இந்திய மீனவர் தப்பித்தவறிச் சென்றால் அவர்களை மனிதாபிமானத்துடன் நடாத்தி உடனடியாக விடுதலை செய்யுமாறு

(4-ம் பக்கம் பார்க்க)

## ரஷ்யாவில் வெளிநாட்டு மாணவர்களுக்கு பாதுகாப்பு

(மாஸ்கோ)

முன்னாள் சோவியத் யூனியனின் பல குடியரசுகளிலும் கல்விகற்கும் மாணவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜோர்ஜியாவில் ஏற்பட்ட உள்நாட்டு பிரச்னை காரணமாக அங்கிருந்து தப்பிச் சென்ற மாணவர்கள் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும்தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் குடியரசுகளில் தற்போது 100 தமிழ் மாணவர்கள் உட்பட 660 இலங்கை மாணவர்கள் கல்வி கற்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## புலமைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரீட்சை (1991) அடுத்த மாதத்துள் நடைபெறுமென்று தெரிவிக்கப்படுகிறது. (சு)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

புவியியல் மண்டபத்தில் நாளை 25-ந் திகதி புதன்கிழமை 'சோழர்காலக் குடியேற்றங்களால் தோன்றிய பூநகரி இடப்பெயர்கள்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பி. புஸ்பரத்தினம் உரை நிகழ்த்தவிருக்கிறார். (சு)

# தமிழர்களின் நெற்பயிர்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டன

[மட்டுநகர்]

கிழக்கு மாகாணத்தில் அறுவடைக்கு தயாரான நிலையில் இருந்த தமிழர்களின் பெரும்பாலான நெல்வயல்கள் கடந்த வாரம் தீயிட்டுக்கொளுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இப்பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகளின் மத்தியிலும், தமிழ் விவசாயிகள் கஷ்டப்பட்டு விதைத்த நெற்பயிர்களை இனம்தெரியாத விஷமிகள் எரித்துவிட்டதினால் தமக்குப் பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறியுள்ளார்கள்.

இந்த தீயிட்ட செயலை பெரும்பாலும் முஸ்லிம் ஊர்காவல் படையினரும், சில குண்டர்களும் இரவோடு இரவாக செய்திருக்கலாம் என இந்த விவசாயிகள் தெரிவித்தனர். (வி)

## உதைபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம் வருமாறு:

கலைநகர் இளைஞர் அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதும். இப்போட்டி சுன்னாகம் ஸ்கந்தாகல்லூரியில் பி.ப. 3 மணிக்கு நடைபெறும்.

## ஸ்ரீபெரும்புத்தூரில் வர்மா நேரடி விசாரணை

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரித்துவரும் ஆணைக் குழுத் தலைவர் திரு. வர்மா, அண்மையில் நேரடியாக ஸ்ரீபெரும்புதூருக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டார்.

திரு. ராஜீவ் காந்தி இரவு தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பின்னர் அந்தத்திட்டம் கைவிடப்பட்ட பயணிகள் விடுதியையும் திரு. வர்மா பார்வையிட்டார்.

திரு. வர்மாவும், ஆணைக் குழு அதிகாரிகளும், பொலிஸ் அதிகாரிகளும், ஸ்ரீபெரும்புதூர் சென்ற போது அங்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

சென்னைக்கு வந்த திரு. வர்மா ஸ்ரீபெரும்புதூர் செல்வதற்கு முன்னர் திரு. ராஜீவ் காந்தி பத்திரிகையாளரிடம் பேசிய பழைய விமானநிலையத்திற்கும் சென்று விசாரணையை நடத்தினர். (கே)

## தட்டுப்பாடு

(புலோலி)

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அத்தியாவசிய மருந்து வகைகளுக்கு மீண்டும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக தொற்றுநீக்கி மருந்து வகைகளுக்கும், அவசர நோயாளர்களுக்கு ஏற்றப்படும் குளூகோசுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. [61)


## அறிவித்தல்

கவி பாரதி சனசமூக நிலைய 7வது ஆண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு

**மாபெரும் 50 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி,**
**5 மைல் மரதன் ஓட்டப்போட்டி,**

நடைபெறவுள்ளது.

அனைவரும் கலந்துகொள்ளலாம். 3-4-92க்கு முன் தொடர்புகொள்ளவும்.

இடம்: சோலைபுரம், கொட்டடி,
காலம்: 5-4-92 ஞாயிற்றுக்கிழமை (சி-6086]


## ஈழத்து தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சில தகவல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஈழத்து இலக்கிய வளர்ச்சி குறித்து யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, கொக்குவில், கோண்டாவில் பாடசாலைகளில் நடாத்திய கருத்துக் கணிப்பில் சுவையான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈழத்தில் வெளியாகிய பல நாவல்களை எழுதியவர்களின் பெயர்களை எழுதுமாறு கோரிய போது 10 மாணவர்கள் மட்டும் 'காட்டாறு' நாவல் செங்கையாழியானால் எழுதப்பட்டதாகவும், மற்றய நாவல்களுக்கு ஒரு சிலரே ஆசிரியர்களின் பெயர்களை சரியாக எழுதியுள்ளார்கள்.

இலங்கையின் பெண் எழுத்தாளர் பெயர்களை எழுதுமாறு கோரியபோது மாணவ, மாணவிகள் சுஜாதா, புஸ்பா தங்கத்துரை, கமலா குணராஜா என நூற்றுக்கணக்கானோர் எழுதியுள்ளனர். விபரக்கொத்தைப்பெற்று நிரப்பியவர்களில் அறுவர் மட்டுமே கோகிலா மகேந்திரனைக்குறிப்பிட்டுள்ளனர். இத்தகவல்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியர் 'நந்தி' டானியல் நினைவுதின விழாவில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (எஸ்)

## கஷ்டநிவாரணப் படி வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். கைதடி அரசினர் ஆயுர்வேத மருத்துவமனை ஊழியர்களுக்கு அரசினால் அறிவிக்கப்பட்ட இரு வருடங்களுக்கான கஷ்டநிவாரணப் படி இன்னும் வழங்கப்படவில்லையென்று ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பணத்தைப்பெற பல தடவைகள் கொழும்பு தலைமைச் செயலகத்துடன் தொடர்புகள் கொண்டும் இப்பணம் கிடைக்காததையிட்டு ஊழியர்கள் கவலைதெரிவிக்கின்றனர். (154)

## இராசிபலன்

**24/03/1992**
**செவ்வாய்க்கிழமை**
**(தமிழுக்கு பங்குனி 11)**

ஷஷ்டி மு. இ. 9-09 வரை, அனுசம் மு. ப. 9-51 வரை, சித்தயோகம், இராகுகாலம் 3-15 முதல் 4-45 வரை, சுப நேரம் காலை 10-45 முதல் 12-15 வரை.

மேடம்: வீண் அலைச்சல், வயிற்றுக்கோளாறு, கோபம்.

இடபம்: விருந்துண்ணல், இனியகாட்சி, பந்துவருகை.

மிதுனம்: மன உற்சாகம், காரியவெற்றி, தூரச்செய்தி.

கடகம்: கடிதத் தொல்லை, தொழில் நஸ்டம், வேதனை.

சிங்கம்: மனத்தாங்கல், தாய் நினைவு, பயம்.

கன்னி: பல காரிய சிந்தை. தனலாபம், தெய்வ வழிபாடு.

துலாம்: கடின உழைப்பு, குடும்ப விரோதம், அசதி.

விருச்சிகம்: தொழில்சிறப்பு, மனமகிழ்ச்சி, வெற்றி.

தனுசு: தொழில் லாபம், உடல் உபாதை, கடன்.

மகரம்: மாதர்உதவி, ஆடம்பர பிரியம், பெரியோர் ஆசி.

கும்பம்: பயண அலைச்சல், குடும்ப சுகம், அன்னியர் உதவி.

மீனம்: கடன்சுமை, தொழில் பாதிப்பு, வாக்குவிரோதம்.

- ஜோஸ்யர்


### சாவகச்சேரி நகரசபை

## ஆதனவரி அறிவித்தல்

1992ஆம் ஆண்டு 1ஆம் கந்தாயத்துக்குரிய ஆதன வரியை தெண்டமின்றி 31-03-92 செவ்வாய்க்கிழமை பகல் 12-30 மணிவரை செலுத்திக்கொள்ளலாமென்பதையும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும் வெற்றுக்காணிகளுக்கும் 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் வரியிறுப்பாளர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன்.

எனவே 31-03-92க்கு முன் வரிகளை செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 19-03-1992. (ஏ 1998)


## முதலாமாண்டு நினைவஞ்சலி



**செல்வி செல்லையா நிமலினி**

**தோற்றம்: 09.10.1979 மறைவு: 05.04 1991**

**திதி: 24.03.1992**

அன்புச் செல்வமே உனது நினைவு ஓராண்டு சென்றாலும் எமது நெஞ்சங்களை விட்டு நீங்காது உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அப்பா, அம்மா, சகோதரர்கள் பாலா, பாலேந்திரா, சுவர்ணா, யூலி.

சேர்ச் வீதி,
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி. (ஏ 1999)


# தொழிற் பயிற்சிகள்

எந்த நாடுகளிலும் இலகுவாக தொழில் வாய்ப்புப் பெற அரிய சந்தர்ப்பம்.

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங்:**
சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் திருத்துதல். ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்.

★ **றீவைண்டிங்:**
மின்மோட்டர், ரான்ஸ்போமர், டைனமோ மற்றும் எலக்ரிக்கல் உபகரணங்கள் றீவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 4 மாதம்.

★ **எலக்றிக்கல் வயறிங்:**
வீட்டு மின்சார வேலை, மின்சாரப் பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 2 மாதம்.

★ **மோட்ட பைசிக்கிள் மெக்கானிசம், நீர் இறைக்கும் இயந்திரம், மோட்ட பைசிக்கிள் திருத்துதல் ஆரம்பம் முதல் பயிற்சியளிக்கப்படும்.**
காலம்: 4 மாதம்.

★ **SPOKEN ENGLISH**
மீண்டும் ஆரம்பம்:
**25-03-1992 (கிழமை நாட்களில்)**
**28-03-1992 (சனி, ஞாயிறு)**

# JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(றெயில்வே கடவை அருகாமை)

(ஏ—1996)

# மழையில் கிடந்து உழலும் 'உலக கிண்ண கிரிக்கெட்' இறுதியாட்டத்தைக் கூட 'மழை' தீர்மானிக்கலாம்

(நமது விளையாட்டு நிருபர் 'தேவா')

அவுஸ்திரேலியாவிலும் நியூஸிலாந்திலும் இம்முறை நடைபெற்ற உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின் முடிவுகளை ''மழை'' முக்கிய பங்கு வகித்து தீர்ப்பளித்ததினுல், உலகக் கிரிக்கெட் வீரர்களின் மத்தியிலும் ரசிகர்களின் மத்தியிலும் சர்ச்சையையும், பெரும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இறுதியாட்டத்தில் கலந்து கொள்வதற்கு தெரிவாகியுள்ள பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக்கும் மழைதான் கைகொடுத்துள்ளது. பாகிஸ்தானும், இங்கிலாந்தும் முதல் சுற்றில் விளையாடும்போது பாகிஸ்தான் 75 ஓட்டங்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் இருந்தது. இங்கிலாந்து துடுப்பெடுத்தாடி 25 ஓட்டங்களைப் பெற்றபோது பெரும் மழை பெய்ததினுல் ஆட்டம் கைவிடப்பட்டு புள்ளிகள் சமனுகப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இங்கிலாந்துக்கும், தென்னுபிரிக்காவுக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றி பெறுவதற்கு மழையே முக்கிய காரணமாக இருந்துள்ளது.

13 பந்தில் 22 ஓட்டம் பெறவேண்டியபோது மழை பெய்தது. இதனுல் 2 ஓட்டங்கள் குறைக்கப்பட்டது

ஒரு பந்து வீச்சில் 22 ஓட்டங்களை எடுக்கவேண்டும் என்று மேற்படி போட்டியின் இறுதியில் போட்டி அமைப்பாளர்கள் தீர்ப்பு வழங்கியதால்தான் இன்று இங்கிலாந்து இறுதியாட்டத்தில் பங்குபற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

''22 வருடங்களின்பின்பு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் கலந்துகொண்ட எமக்கு இது திருப்தி அளிக்கவில்லை'' என தென்ஆபிரிக்க வீரர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த உலகக்கிண்ணக்கிரிக்கெட் போட்டியின் ஆரம்பத்தில், உற்சாகத்துடன் பங்குபற்றிய ஆசிய ஆபிரிக்க நாடுகளின் போட்டிகளின் போது மழை குறுக்கிட்டதினுல் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கும், ஐரோப்பியநாடுகள் பங்குபற்றும்போது மழை குறுக்கிட்டதினுல் வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கும் வேற்றுமை இருப்பதாக தற்போது கூறப்படுகின்றது.

இலங்கை-இந்தியா, தென்னுபிரிக்கா - பாகிஸ்தான், இந்தியா - சிம்பாவே, மே. இந்தியா-இந்தியா, அவுஸ்திரேலியா-இந்தியா, நியூஸிலாந்து-சிம்பாவே இங்கிலாந்து-தென் ஆபிரிக்கா போட்டிகளின் போது ஏற்பட்ட மழையால் வெற்றி தோல்வி மாறுபட்ட விதத்தில் நிர்ணயிக்கப்பட்டது.

மே. இந்தியாவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான போட்டியில் முதலில் இந்தியா துடுப்பெடுத்தாடிய போதும் பின் மழைவரும்என நன்குதெரிந்த மே. இந்திய அணி முதல் 15 ஓவர்கள் மிக வேகமாக ஆடி, 120 ஓட்டங்களை பெற்றதன் மூலம் தனதுவெற்றியை பெற்றது.

இதனுல் போட்டியை, மழை குழப்பலாம் என்ற அச்சத்தில் பூவா? தலையா? போட்டுப் பார்ப்பதில் வென்ற அணிகள் பெரும்பாலும் துடுப்பாட்டத்தையே முதலில் தெரிவுசெய்தன. எதிர்பார்த்ததுபோல் மழையால் அடுத்து ஆடிய அணிகள் தோல்வியையே தழுவின.

நாளை நடைபெறப்போகும் இறுதியாட்டத்தை இரு அணி வீரர்களுமா அல்லது 'வர்ண பகவானு' நிர்ணயிப்பார்கள் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். (வி)

## ராஜீவைத் தாக்கிய சிப்பாயும் இலங்கை சட்டப்படியே விசாரிக்கப்பட்டார்

[கொழும்பு]

''இந்தியப் பிரதமராக ராஜீவ்காந்தி இலங்கைக்கு வந்தபோது ரோஹன விஜேமுனி என்ற கடற்படைவீரர் அவரைத் தாக்கினர். அவர்செய்த குற்றத்தை இலங்கைச் சட்டப்படி விசாரித்தோம். இந்திய சட்டப்படி விசாரிக்க இந்தியா முற்படவில்லை. அதேபோன்றே பிரபாகரன் விடயத்திலும் இலங்கை நடந்துகொள்ளும்''

இவ்வாறு பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா பாராளுமன்றத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அடுத்து திரு அஸ்ரப் அங்கு பேசுகையில் கூறியதாவது:

எமது மண்ணில் இடம்பெறுத குற்றச் செயலுக்காக சேபால ஏக்கநாயக்காவை விசாரணை செய்து தண்டனை வழங்கக்கூடிய அளவுக்கு எமது சட்டங்கள் இருந்திருக்கின்றன. எனவே பிரபாகரனை விசாரணை செய்ய எமது நாட்டுச் சட்டங்கள் போதுமானவை என்ருர். (சு)

## இருல்பிடித்துக்கொண்டிருந்த தாயும் மகனும் சுட்டுக்கொலை

[திருமலை]

மூதூர் இலங்கைத்துறை முகத்துவாரம் பகுதியில் இருல் பிடித்துக்கொண்டிருந்த தாயும் மகனும் படையினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியானுர்கள்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பத்தகுட்டி பாக்கியம் (38 வயது). அவரின் மகன் சிவகுமார் (வயது 11) ஆகியோரே சுட்டுக்கொல்லப்பட்டவர்களாவர்.

இரவு நேரத்தில் இருல் பிடித்துக்கொண்டிருந்தபோது இவர்களை நோக்கி தூரத்திலிருந்து துப்பாக்கிப்பிரயோகம் நடத்தப்பட்டது.

இத்துப்பாக்கிச்சூட்டினுல் 8 வயதுப் பெண் குழந்தையான ஜெயமலர் என்பவர் படுகாயமடைந்த நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ரீ)

## விடுதலைப் புலிகள் மீது தொடர்ந்து கண்காணிப்பு

(கல்கத்தா)

இந்தியாவின் அமைதிக்கும் ஒருமைப்பாட்டுக்கும் ஊறு விளைவிக்கும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க மத்திய அரசு தமிழக அரசுக்கு இயன்ற உதவிகளை அளிக்குமென்று பிரதமர் திரு பி.வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கல்கத்தாவிலுள்ள சாந்திநிகேதன் ஸ்வபாரதி பல்கலைக்கழகத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் மேற்கண்டவாறு பிரதமர்நரசிம்மராவ்கூறினுர்.

பிரதமர் நரசிம்மராவ்அங்கு மேலும் கூறியதாவது: விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரமான கண்காணிப்பு தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவித்தார். (மா)

## மன்னர் அகதிகள் வெளியேறத் தடை

[யாழ்ப்பாணம்]

மன்னுர்த் தீவிலுள்ள பேசாலை சனிவிலேஜ் அகதி முகாம்களில் அமர்த்தப்பட்டிருக்கும் இந்தியாவிலிருந்து வந்த மன்னுர்மாவட்ட அகதிகளை தீவுப் பகுதியைவிட்டு வெளியே செல்லக்கூடாதென்று கடுமையான உத்தரவினை இராணுவ உயரதிகாரிகள் கடந்தவாரம் பிறப்பித்துள்ளனர்.

இதனுல் அகதிகள், அங்கு ஏற்பட்டுள்ள இடநெருக்கடியினுல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அகதிமுகாம்களில் ஓலைக் குடிசைகளை சொந்தமாக அமைத்து வருகின்றனர்.

இதுதவிர மன்னுர் தீவுக்கு அப்பாற்பட்ட மன்னுர் மாவட்ட மக்களை தீவுப்பகுதிக்குள்ளேயே குடி அமர்த்தப்படல் வேண்டுமெனவும் இராணுவ உயரதிகாரி அங்குள்ள அரச அதிபரிடம் கண்டிப்பான உத்தரவிட்டுள்ளார் என அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (56)

## புலிகள் என்ற போர்வையில் மலையக இளைஞர் கைது

(ஹற்றன்)

பொய்த்தகவல்களின் அடிப்படையிலும், 'பெட்டிஸன்' பொய்யாகக் கொடுக்கப்படுவதனுலும் மலையகத்தில் புலிகள் எனக்கூறி, பல மலையக இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என தொழிலாளர் தேசிய சங்கத்தலைவர் டி. ஐயாத்துரை கூறியுள்ளார்.

இவ்வாறு புலிகள் என்ற போர்வையில் பதுளையிலிருந்து மாத்தளை வரை அநேகமான மலையக இளைஞர்கள் கைதாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (கே)

## அதிசய நீரூற்று

[தெல்தெனியா]

தெல்தெனியா பகுதியில் உள்ள ஒரு இடத்தில் நிலத்திலிருந்து வெடிப்பு ஏற்பட்டு அதிலிருந்து நீரூற்று உருவாகியுள்ளது. இதை, ஏராளமான மக்கள் பார்வையிட்டு வருவதாக தெரியவருகிறது. (59)

## 'வன்னி விக்கிரம'வால் பல வீடுகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வவுனியாவில் ஏற்பட்ட 'வன்னி விக்கிரம 3' ராணுவ நடவடிக்கையின் போது ஈச்சங்குளம். கல்மடு ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல் ஹெலித்தாக்குதலின் போது 25க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாக அங்கிருந்துவந்தவர்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் செய்யப்பட்ட சிறு தானியவகை பயறு, உழுந்து, எள்ளு ஆகியவை தாக்குதல் நடவடிக்கையினுல் கடுமையாக சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தனர். (56)

## லிபிய விமானங்களுக்கு ஐ.நா. தடை விதிப்பு

[நியூயோர்க்]

மேற்கத்திய விமானங்கள் இரண்டை குண்டு வைத்து தகர்த்ததாக குற்றஞ்சாட்டப்படும் இரு லிபிய ரகசிய பொலிசாரை லிபியா, மேற்கத்திய நாடுகளிடம் ஒப்படைக்கும்வரை லிபியாவில் எந்த வெளிநாட்டு விமானங்களும் இறங்கக்கூடாது என்றும், லிபியாவிலிருந்த எந்த விமானங்களும் வெளியேறக் கூடாதெனவும் ஐ. நா. பாதுகாப்புச்சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவுள்ளது

ஆனுல் ஐ. நா பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை தான் மதிக்கப் போவதில்லையென லிபியா தெரிவித்துள்ளது

இதேவேளை லிபியாவின் பிரச்னை குறித்து எகிப்தில் கூடியிருக்கும் அரபுலீக் அமைப்பு லிபியாவுக்கு ஆதரவாக தீர்மானம் எடுத்து ஐ. நா. பாதுகாப்புச்சபையின் தீர்மானத்தையும் எதிர்க்கும் எனவும் தெரியவந்துள்ளது. (கே)

## விமானத்திலிருந்து அனுதரவாக மீட்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகள்

(பம்பாய்]

பம்பாய் விமானநிலையத்தில் நேற்று முன்தினம் 73 லட்சம் ரூபாய் பெறுமதியான தங்கத்தை சுங்க அதிகாரிகள் கைப்பற்றினுர்கள்.

இந்தியாவின் 'எயர் பஸ்' விமானத்தில் அனுதரவாகக் கிடந்த ஒரு மர்மமான சூட்கேசை சுங்க அதிகாரிகள் மிக பாதுகாப்பாக எடுத்து திறந்தபோது அதில் 150 தங்க பிஸ்கட்டுகள் இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தார்கள். இதுசம்பந்தமாக யாரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை.

(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள - தமிழ் இளைஞர் இணைந்து இயங்கினுல் எவ்வாறு அழைப்பது?

### மலையக எம். பி. கேள்வி

[கொழும்பு]

''தமிழ் இளைஞர்கள் கொள்ளையடித்தால் புலிகள், சிங்கள இளைஞர்கள் கொள்ளையடித்தால் ஜே. வி. பி. சிங்கள தமிழ் இளைஞர்கள் சேர்ந்து கொள்ளையடித்தால் அவர்களுக்கு என்ன பெயர்?''

இவ்வாறு பாராளுமன்றத்தில் அவசரகாலநிலை நீடிப்புக்கான பிரேரணை மீது பேசுகையில் பதுளை மாவட்ட எம்.பி. திரு. சென்னன் கேள்வி எழுப்பினுர்.

கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் மலையகத்தில் கைது செய்யப்பட்டவர்கள் குடும்பத்தலைவர்கள், இவர்கள் உழைப்பிலேயே இவர்களின் குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களைத் தொடர்ந்து காவலில் வைத்திருப்பது கவலைக்குரியது.

தற்போது 50 க்கும் மேற்பட்ட மலையகத்தவர்கள் தடுப்புக்காவலில இருப்பதாகவும் அவர் மேலும்கூறினுர். (சு)

## கட்டுத்துவக்கு வெடித்துக் காயம்

(யாழ்ப்பாணம்)

மிருகவேட்டைக்குத் தயாரிக்கப்பட்ட கட்டுத்துவக்கு இயக்கும் வேளையில் தற்செயலாக வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்.

வவுனியா கல்மடு ஆசிகுளத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வைரமுத்து (53 வயது) என்பவரே காயமடைந்த நிலையில் யாழ். போதனுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (56)

## தவக்கால நற்சிந்தனை

நாம் எமது பாவங்களுக்கு இறைவனிடம் மன்னிப்புப் பெறவேண்டுமாகில் எம் சகோதரர்களையும் முழு உள்ளத்தோடு மன்னிக்க வேண்டும். அப்போதுதான் வானகத் தந்தையும் எங்களுக்கு மன்னிப்பு அளிப்பார். நாம் மன்னிக்கவேண்டிய காலம் இதுவே. எனவே வருந்துகின்ற உள்ளத்தோடும் தாழ்மையான சிந்தையோடும் இறைவனிடம் இறைஞ்சுவோம்.

(மா. தார்சிசியஸ்)

# இந்திய மீனவர் விவகாரம்: இலங்கைத் தூதுவரிடம் மத்திய அரசு கடும் ஆட்சேபம்

(புதுடில்லி)

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது குறித்தும், அவர்களது மீன்பிடி உபகரணங்கள் சேதமாக்கப்படுவது குறித்தும் இந்திய அரசு, இலங்கை அரசுக்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

புதுடில்லியில் உள்ள இந்தியாவுக்கான இலங்கை உயர் ஸ்தானிகர், இந்திய வெளி உறவுச் செயலகத்திற்கு அழைக்கப்பட்டு, மீனவர்கள் தாக்கப்படுவது சம்பவம் குறித்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதோடு மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ வண்ணம் நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டதுடன் இந்தியாவின் ஆட்சேபத்தை இலங்கை அரசுக்கு தெரிவிக்கும்படியும் இலங்கைத் தூதுவரிடம் தெரிவிக்கப்பட்டது. [சே]

## வங்கியாளர் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

வங்கியாளர் பரீட்சைக்குத் தோற்றும் சகல வங்கி ஊழியர்களுக்குமென பயிற்சி நிலையமொன்று விரைவில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது. இந்நிலையத்தில் வங்கியாளர்களுக்கான நூலகம் ஒன்றும் அமைக்கப்படுமென வங்கி உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

## வங்கிகளுக்கு ஜெனரேட்டர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல வங்கிக்கிளைகளுக்கும் ஒவ்வொரு ஜெனரேட்டர்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு கூட்டுப்படை தலைமையகம் அனுமதிவழங்கியுள்ளது. சுமார் ஐம்பது ஜெனரேட்டர்கள் யாழ்ப்பாண வங்கிக்கிளைகளுக்கு எடுத்துவர வங்கிநிர்வாகிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எஸ்)

### மீனவரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியமத்தியஅரசு இலங்கை அரசைக் கோரியுள்ளது''.

மேற்கண்டவாறு தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டப்பேரவையில் நேற்று உரையாற்றுகையில் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்விடயம்சம்பந்தமாக பிரதமர் நரசிம்மராவ் கடிதம் எழுதியிருப்பதாகவும் அக்கடிதத்தில் இலங்கைக்கு கையளிக்கப்பட்ட கச்சதீவை திரும்பப் பெறுவது முக்கிய கொள்கைக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் உள்ளடக்கிய ஒன்று என்றும் பிரதமர் தெரிவித்திருப்பதாகவும் கவனமாகவும் உன்னிப்பாகவும் அணுக வேண்டும் எனவும் இப்பிரச்னையை ஆழமாக ஆராயும்படி வெளிவிவகார அமைச்சுக்குப் பணிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மேலும் காணாமல்போன 7 தமிழக மீனவர் தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் கொழும்பில் இந்திய தூதரகம் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவுத்தார், (க)

### விமானத்திலிருந்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்குள் ஐந்து கிலோ தங்கம் கொண்டுவரலாம் என அரசு தெரிவித்ததின் பின்பு முதல்தடவையாக கைப்பற்றப்பட்ட பெருந்தொகை தங்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. (வி)

## மலையகத்தில் வரட்சி தொழிலாளர் பாதிப்பு

[கொழும்பு]

மலையகத்தில் தற்பொழுது நிலவும் கடும் வரட்சியினால் தேயிலை, றப்பர் தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தோட்டங்களில் கிழமையில் ஏழு நாட்கள் வேலைசெய்தவர்களுக்குநான்குநாட்களேவேலை கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த நிலை நீடிக்குமானால் வேலை இழக்கும் ஆபத்து வருமென தோட்ட நிர்வாகி ஒருவர் தெரிவித்தார். [59]கள்.

## தேடுதல் வேட்டை

(மட்டுநகர்)

மூதூர் பகுதியில் பலத்த தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கான படையினர் நேற்று முதல் இப்பகுதியைச் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி வருகிறார் (ரி)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கணித விஞ்ஞான சேவைக்கால ஆலோசகர்களுக்கான செயலமர்வு நாளை புதன்கிழமை கோப்பாய் மகாவித்தியாலயத்தில் அமைந்துள்ள மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தில் நடைபெறும். (சு)

### பல நாட்டு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையைப் பாதுகாக்கப் போரிட்ட வீரர்களின் 50வது ஆண்டு ஞாபகார்த்த விழாவில் கலந்து கொள்வதற்காகவே இந்த போர் வீரர்கள் இலங்கை வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது [ரி]

### குமண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவை தவிர தபால்பொதிகளும், சமய நிறுவனங்களுக்கு வேண்டிய பெருமளவிலான உணவுப்பொருள்களும், யாழ் மாவட்டத்தில் பரீட்சைகள் நடாத்துவதற்கு வேண்டிய ஆவணங்களும் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ளன. (வி)

### மணலாறு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பட்ட ஆயுதங்கள், படையினரைவிடப் புலிகளே கூடுதலாகப் பாவிப்பதாகவும் இராணுவ நிபுணர்கள் மேலும் தெரிவித்தனர். (ரி)

### அரசு தானகவே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் அரசுக்கு எதிராக மேற்கொண்டுவரும், பாதயாத்திரை, காலியைச் சென்றடைந்த பின்னர், பத்திரிகையாளர் மத்தியில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள்கலந்துகொண்ட இந்த பாத யாத்திரை ஊர்வலம் காலியை அடைந்தபோது அங்கு அவர்களுக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது.

இப்பாதயாத்திரையில் நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்காராவும் கலந்து கொண்டார்.

ஆரம்பித்த எத்தனையோ எதிர்ப்புகள் மத்தியில் பாதயாத்திரைக்கு இன்று பலத்த ஆதரவு மக்களிடமிருந்து கிடைத்துவருகிறது என்றும் அனுரா பண்டாரநாயக்கக மேலும் கூறினார்,

## மட்டுநகரில் மூன்று தமிழர் ராணுவத்தினால்சுட்டு கொலை

(மட்டுநகர்)

மட்டு. நகரில் மூன்று தமிழர்கள்அண்மையில் ராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கடந்த வியாழக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்ட மூவரின் சடலங்களும் மட்டு. நகர் பிரதான வீதியில் வீசப்பட்டிருந்தன.

இச்சடலங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் மட்டு அரசினர் வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளன,

மட்டு. நகரில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 10 தமிழர்கள் ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

## முகாமைத்துவ தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தால் முகாமைத்துவ தினம் நாளை 25-ம் திகதி பாடசாலை மட்டத்திலும் கல்வித்திணைக்கள மட்டத்திலும் கொண்டாடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 8-25க்கு கொடியேற்றும் வைபவத்தோடு ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சி மாலை 4-00 மணிக்கு கொடியிறக்கலுடன் முடிவுறும். (சு)

## அம்பிசிலினை கண்டுபிடித்தவர் மரணம்

(நியூயோர்க்)

மக்கள் பாவனையில் பிரபல்யம் வாய்ந்த 'அம்பிசிலின்' மருந்தைக் கண்டுபிடித்த பிரபல விஞ்ஞானி டாக்டர் ஜான் சாகூஹன் புளோரிடாவில் கடந்த சனிக்கிழமை மரணமானார்.

நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்த இவர், மருத்துவமனை ஒன்றில் காலமானதாகக் கூறப்படுகிறது. (க)

### இருநாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தல்களினால் பத்து பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இப்பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக நடைபெற்றுவரும் முப்படைத் தாக்குதல்களினால் காடுகள் அழிந்துள்ளதுடன் 2000 ஏக்கர் நெல் வயல்களும் அழிந்துள்ளதாகத் தெரியவருகிறது.

விமான, ஷெல், பீரங்கித் தாக்குதல்கள் கடந்த ஒரு வாரகாலமாக இப்பகுதிகளில் இடம்பெற்று வருவது தெரிந்ததே. (ரி)

### விமானத் தாக்குதல்

[வவுனியா]

வவுனியா விளக்கு வைத்த குளத்தில் நேற்றுக் காலை 11-30 மணியளவில் இரு விமானங்களிலிருந்து குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இத்தாக்குதலினால் சிவப்பிரகாசம் என்பவரின் வீடு சேதமடைந்துள்ளது.

தேவேலை பேயாடி கூழாங்குளம், செட்டிக்குளம் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து குடியிருப்புக்களை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (ரி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்படுவார்கள்.

இதற்கான ஏற்பாடுகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழு செய்துதரவேண்டும் என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இக்கடிதம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மூலம் நடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## லிபியாவில் உள்ள சுவிஸ் நாட்டவரை வெளியேறுமாறு கோரிக்கை

[திரிப்போலி]

லிபியநாட்டில் தற்பொழுது வசிக்கும் சுவிஸ்லாந்து நாட்டவரை உடனடியாகநாட்டைவிட்டு வெளியேறுமாறு சுவிஸ் அரசு கேட்டுள்ளது,

பிரான்ஸ் ஜேர்மனி, அமெரிக்கா போன்ற நாட்டவர்கள் லிபியாவைவிட்டு ஏற்கனவே வெளியேறிவிட்டதாகவும் இத்தாலியை சேர்ந்த 1,500 பேரை லிபியாவைவிட்டு வெளியேறும்படி இத்தாலிய அரசு கேட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு விமானங்களுக்கு குண்டு வைத்ததாக சந்தேகிக்கப்படும் இரு லிபிய பிரஜைகளை ஐ. நா. விடம் ஒப்படைக்க லிபியா மறுத்துவருவதையொட்டியே மேற்படி சூழ்நிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகிறது. ]க]

## விமான விபத்தில் 24 பேர் பலி

[நியூயோர்க்]

அமெரிக்க நியூயோர்க் நகருக்கருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் 24 பேர் பலியானார்கள். 27 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்காவுக்குச் சொந்தமான இந்த விமானம் 51 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் புறப்பட்டபோது திடீரெனத் தீப்பிடித்தது. (ரி)

## மைக்ரோ ரேப் உரையாடல்

(சென்னை)

தி. மு. க. எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதியை ஒரு கோஷ்டியினர் கடத்த முயன்றதாக அவர் காவல் நிலையத்தில் புகார் செய்துள்ளார். அவர் வீட்டுக்கு இரவு வந்த கோஷ்டியினர் அவரை அ. தி. மு. க.வில் சேரும்படி வலியுறுத்தினர். இக்கோஷ்டியின் தலைவர் நாஞ்சில் சுப்பு, இவர், ஜெயலலிதா சினிமாவில் நடித்தபோது அவருக்கு 'மேக்கப் மென்'ஆக இருந்தவர். இளம்வழுதி அக்கோஷ்டிக்கும், தமக்கும் இடையில் நடந்த உரையாடலை 'மைக்ரோ டேப்' மூலம் இரகசியமாகப் பதிவு செய்துகொண்டார். அந்த உரையாடல் பின்னர் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. நாஞ்சில் சுப்புவை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

## நூறு ரூபா நாணயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி 'சாவ்' விளையாட்டுப் போட்டிக்கு வெளியிடப்பட்ட நூறுரூபாய் நாணயத்தை பொதுமக்களுக்கு வழங்கிவருகிறது.

இந்தநாணய குத்தி நூறு வீதம் வெள்ளியால் செய்யப்பட்டதும் 10. 2கிறும் எடையுடையதுமாகும். மூன்று பாஷைகளில் 'சார்க்' நாடுகளின் தேசிய கொடியின் படமும் எழுத்துக்களும் இடம் பெற்றுள்ள இந்நாணயம் அழகிய பெட்டிகளில் பொருத்தப்பட்டு இருநூற்றி ஐம்பது ரூபாய்க்கு வழங்கப்பட்டுவருகின்றது. (எஸ்)

### படையினர்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

களிலிருந்து குடிமனைகளை நோக்கி நேற்றுத் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

மாதகல், திருவடிநிலைக் கடலில் ரோந்து புரிந்த கடற்படையினரும் மக்கள் குடியிருப்புளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். (ரி)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Number B/10336/81